முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

## மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) முன்னோடிப்பரீட்சை 2018**
**General Certificate of Education (Advan Level)Third Term Examination, 2018**

| மனைப்பொருளியல்<br>Home Economics | 28 T I | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
|---|---|---|

**அறிவுறுத்தல்:-**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (பகுதி – I)
2. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. 1 – 50 வரையுள்ள வினாக்களுக்கு 1,2,3,4,5 வினா அடையாளமிடப்பட்ட விடைகளில் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

- **1 – 50 வரையுள்ள வினாக்களிற்கு (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**

1) மனைத்திட்டமிடற் கோட்பாடுகளில் சமையலறையின் ஒரு பகுதி சாப்பட்டறை அல்லது களஞ்சிய அறையாகப் பயன்படுத்தல்

   01) நெகிழும் தன்மை  02) நடமாடல்  03) இடவசதி
   04) கூட்டமைப்பு  05) திசைமுகம்

2) ஆக்கமொன்றில் எடுப்பான தோற்றமும் விரிந்த தன்மையும் காணப்படுமாயின் அங்கு கையாளப்பட்ட ரேகை வகைகள் முறையே

   01) நிலைக்குத்துக்கோடு, கிடைக்கோடு
   02) கிடைக்கோடு, சரிவுக்கோடு
   03) வளைகோடு, சரிவுக்கோடு
   04) சரிவுக்கோடு, நிலைக்குத்துக்கோடு
   05) சரிவுக்கோடு, வளைகோடு

3) பச்சை, செம்மஞ்சள் ஆகிய துணைநிறங்கள் இரண்டையும் சம அளவிலே கலப்பதால் கிடைக்கும் வர்ணமும், வகையும் முறையே

   01) புடை மஞ்சள் - இடைநிறம்
   02) புடை மஞ்சள் - புடைநிறம்
   03) புடைசிவப்பு – புடைநிறம்
   04) புடை சிவப்பு - இடைநிறம்
   05) செம்மஞ்சள் பச்சை – துணைநிறம்

4) நீரின் நிலையற்ற வன்மையை நீக்கும் ஒரு முறையாக கல்சியம் ஐதரொட்சைட் சேர்க்கப்படுகிறது. இங்கு கல்சியம் ஐதரொட்சைட் என்பதனைக் குறிக்கும் குறியீடு

   01) $Co_2$  02) $H_2CO_3$  03) $Ca(OH)_2$  04) $H_2o$  05) $O_2$

5) சவற்கார உற்பத்தியின் போது தாவர எண்ணெயுடன் காரப் பதார்த்தமாக எரிசோடா அல்லது எரிபொற்றாசு பயன்படுத்தப்படுகிறது. இங்கு எரிசோடா, எரிபொற்றாசு என்பவற்றைக் குறிக்கும் குறியீடு முறையே

   01) $H_2O, O_2$  02) $Na_2So_4$. Nacl  03) $H_2O$ Cacl  04) (NaoH), (KoH)  05)(KoH), $Co_2$

6) உலர்சலவைத் தொழிற்பாட்டின் பிரதான படிமுறைகள்

01) 2  02) 4  03) 3  04) 6  05) 5

7) ஒஸ்ரம் நிறுவனத்தினால் மின் காந்தத் தடுக்கிக்குப் பதிலாக இலத்திரனியல் தடுக்கி பயன்படுத்தப்பட்டது. இதன் காலப்பகுதி யாது?

01) 1980  02) 1975  03) 1890  04) 1930  05) 1985

8) அற்ககோல் உற்பத்திக்கு அவசியமான டைசக்கரைற் வகை எது?

01) சுக்குரோசு 02) இலற்றோசு  03) மோல்ற்ரோசு  04) பிறற்ரோசு  05) கலற்றோசு

9) உணவாக உட்கொள்ளக்கூடிய நார்ப் பதார்த்தங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – செலுலோசு  B – பெத்தின்  C - இலிக்னின்  D – பிசின்

இவற்றுள் நீரில் கரையாத நார்ப்பதார்த்தங்கள் எவை?

01) B, D  02) A, C  03) A, B  04) C, D  05) C, B

10) மாப்பொருள் அடங்கிய பாண்துண்டு ஒன்றிற்கு குறிப்பிட்ட சோதனைப்பொருள் சேர்க்கப்பட்ட போது கரும் நீலநிறமாக அல்லது நாவல் நிறமாக மாறியது. இங்கு சேர்க்கப்பட்ட சோதனைப் பொருள் யாது?

01) அயடீன் கரைசல்  04) பொற்றாசியம் ஐதரொக்சைட்

02) மில்லனின் கரைசல்  05) செப்பு சல்பேற்

03) நைத்திரிக்கமிலம்

11) எமது உடலில் அணுக்கள், நொதியங்கள், ஓமோன்களின் உற்பத்திக்கு உதவுவது

01) காபோவைதரேற்  02) விற்றமின்கள்  03) கனியுப்புக்கள்

04) புரதம்  **05)** கொழுப்பு

12) ஆண், பெண்களின் உடல் நிறையின் பெறுமானம் பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்படும் இடைச்சுற்றளவு

01) 90Cm, 80Cm  02) 80Cm, 90Cm  03) 80Cm, 100Cm

04) 100Cm, 110Cm  **05)** 90Cm, 70Cm

13) எண்ணெய் வகை பாண்டல் தன்மை அடைவதைத் தவிர்க்க சேர்க்கப்படுவது

01) விற்றமின் A  02) விற்றமின் C  03) விற்றமின் K

04) விற்றமின் D  **05)** விற்றமின் E

14) சடைமுளைகளின் வெட்டுமுகத் தோற்றத்தின் பகுதிகள் சில தரப்பட்டுள்ளன

A – சீதமென்சவ்வு  B – குருதி மயிர்த்துறைக்குழாய்கள்  C – பாற்கலன்கள்

D – குடற்சுவர்  E – குடல் உட்புறம்

தரப்பட்டுள்ள பகுதிகளில் நெடுக்குவெட்டுமுக அமைப்புக்கள்

01) B, C  02) A, D  03) B, E  04) E, D  05) E, A

15) அகத்துறிஞ்சல் செயற்பாட்டிற்காக சடைமுளைகளில் கொண்டு செல்லல் நடைபெறுகிறது. எனவே கொண்டு செல்லல் நடைபெறும் முறைகள்

01) 4 02) 3 03) 2 04) 5 05) 6

16) நீரில் கரையாத போசணைகள் அகத்துறிஞ்சப்படுவது

01) வாய்க்குழி 02) நிணநீர்த்தொகுதி 03) ஈரல்
04) சிறுகுடல் 05) வாய்நாளம்

17) இரும்பு அகத்துறிஞ்சலை நிரோதிக்கும் காரணி அல்லாதது

01) ஒக்சலிக்கமிலம் 02) கல்சியம் 03) அமினோஅமிலம்
04) தேநீர் **05)** பைடிக்கமிலம்

18) உடலிலிருந்து வெளியேற்றப்படும் நைதரசனின் அளவு அதிகமாக உள்ள பருவம்

01) வயோதிபப்பருவம் 04) கட்டிளமைப்பருவ ஆண்
02) கட்டிளமைப்பருவம் 05) பிள்ளைப்பருவம்
03) கர்ப்பிணிப்பருவம்

19) புரத அனுசேபத் செயற்பாடு தொடர்பான சில கூற்றுக்கள் தரப்பட்டன.

01) நொதிய உற்பத்தி 03) குருதி உற்பத்தி 04) யூரியா உருவாக்கப்படல்
02) ஓமோன் உற்பத்தி 05) நைதரசன் சமநிலை

மேலேயுள்ள கூற்றுக்களில் உட்சேபச் செயன்முறையாக அமைவது

01) 4, 5 02) 5, 6 03) 1, 2 04) 3, 4 05) 3, 6

20) நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான ஆணைக்குழுச் சட்டம் அனுமதியளிக்கப்பட்ட காலப்பகுதி

01) 2003.01.09 02) 2002.01.09 03) 2000.01.09 04) 2003.03.17 05) 2001.03.17

21) பின்வருவனவற்றுள் வன்பொதியிடு பதார்த்தமாக அமைவது

01) தடித்த பிளாஸ்ரிக் 04) மெல்லிய பிளாஸ்ரிக்
02) காட்போட் 05) கண்ணாடி
03) அலுமினியப் படலம்

22) உணவு தயாரிக்கும் போது பல்வேறு சேர்மானப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. அவ்வாறான சில சேர்மானப் பொருட்கள் சில தரப்பட்டுள்ளன.

* நிறமூட்டிகள் * சுவையூட்டிகள் * நற்காப்புப் பாதர்த்தங்கள்

மேலே தரப்பட்ட சேர்மானப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட இலக்கங்கள் முறையே

01) E100, E 421, E 200 04) E 421, E 100, E 200
02) E 200, E 421, E 100 05) E 200, E 100, E 421
03) E 100, E 200, E 421

23) செலுலோஸ் அதிகாகவுள்ள இரண்டு உணவு மூலங்கள்

01) கரட், பப்பாசி 03) பொன்னாங்காணி, கோகிலா 04) போஞ்சி, கெக்கரிக்காய்
02) கத்தரி, அன்னாசி 05) அகத்தி, உருளைக்கிழங்கு

24) குறைந்த உயிரியற் பெறுமானமுடைய புரதம்

01) இலஸ்ரின் 02) கொலாஜன் 03) ஜெலற்றின் 04) கேசின் 05) அல்புமின்

25) ஈரலில் சேமித்து வைக்கப்படும் விற்றமின்கள்

01) விற்றமின் A, D
03) விற்றமின் C, D
04) விற்றமின் B, K
02) விற்றமின் $B_2$, $B_6$
05) விற்றமின் $B_2$, D

26) நபர் ஒருவர் தனது உணவு வேளையொன்றில் 468கிலோ கலோரி அடங்கிய உணவுத் தொகுதியை உள்ளெடுத்தார். அவற்றின் 75g காபோவைதரேற் 12g கொழுப்பு சேர்க்கப்பட்டதெனின் அவர் உள்ளெடுத்த புரத உணவின் பெறுமானம் யாது?

01) 15g 02) 10g 03) 8g 04) 20g 05) 22g

27) பால், முட்டை, இறைச்சி என்பனவற்றில் அடங்கியுள்ள புரதவகை முறையே

01) அல்புமின், மயோசின், கேசின்
04) குளூட்டனின், லெகுமின், கேசின்
02) கேசின், அல்புமின், மயோசின்
05) லெகுமின், குளூட்டன், அல்புமின்
03) மயோசின், அல்புமின், கேசின்

28) சன்ட்விச் தயாரிக்கையில் பாண்துண்டுகளிற்கு மாஜரின் அல்லது பட்டர் பூசுவதற்கான காரணம்

01) ஈரப்பற்று அடைவதைத் தவிர்க்க
04) சகலரும் விரும்புதல்
02) போசணை அதிகரிக்க
05) ஒன்றுடன் ஒன்று பற்றிக் கொள்ள
03) நீண்டகாலம் பேண

29) ஈற்றுணா தயாரிக்கும் போது ஜெலடீன் பயன்படுத்தப்படுவதன் நோக்கம் அல்லாதது

01) இறுக்கத் தன்மையை ஏற்படுத்தல்
02) மென்மையான இழையமைப்புப் பெறல்
03) உணவுச் சமிபாட்டை இலகுபடுத்தல்
04) உணவின் பல்வகைமைத் தன்மையை ஏற்படுத்த
05) கடின இழையமைப்புப் பெற

30) புள்ளி விபரங்களின் அடிப்படையில் இலங்கையில் அறுவடையின் போது வீண் விரயமாக்கப்படும் மரக்கறி, பழவகைகளின் வீதம்

01) 40% - 60%
02) 30% - 40%
03) 70% - 80%
04) 35% - 45%
05) 40% - 50%

31) மரக்கறிகள் நீரகற்றலின் அனுகூலமல்லாதது

01) தட்டுப்பாடான காலத்தில் பயன்படுத்தல்
02) மரக்கறிகளின் எடையைக் குறைத்தல்
03) நீண்டகாலம் பாதுகாத்தல்
04) சேமித்தல், கொண்டு செல்லல் இலகு
05) பழுதடையும் தன்மை குறைக்கப்படும்

32) பாகற்காய் ஒன்றினை நீரகற்றல் செயற்பாட்டிற்காக பிளான்ச் செய்வதற்கான நேரம்

01) 3 – 4 நிமிடம் 02) 3 – 5 நிமிடம் 03) 6 நிமிடம்

04) 2 நிமிடம் **05)** 8 நிமிடம்

33) உணவின் போசணைப் பெறுமானத்தை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சேர்மானப் பொருட்களின் ஒட்சியெதிரியாக நிறத்தைப் பேணுவதற்காக பழவகை தயாரிப்பில் பயன்படுத்துவது

01) விற்றமின் C 02) விற்றமின் A 03) விற்றமின் A, D

04) விற்றமின் B **05)** விற்றமின் E

34) பால் பாச்சர் பாகம் செய்யும் செயற்பாட்டில் H.T.S.T முறை

01) உயர் வெப்பநிலையில் கூடிய நேரம்

02) உயர் வெப்பம், குறைந்த நேரம்

03) குறைவெப்பம், குறைந்த நேரம்

04) மாறாத வெப்பம்

05) கூடிய வெப்பம், குறைந்த நேரம்

35) பின் பிள்ளைப்பருவப் பிள்ளைகளின் உயரம், நிறையைக் காட்டும் நியம அட்டவணையில் ஆண் பிள்ளைகளை விடப் பெண்பிள்ளைகளில் அதிகளவு உயர வித்தியாசத்தைக் காட்டும் வயது

01) 7 02) 8 03) 10 04) 11 05) 12

36) பின்பிள்ளைப்பருவ மாணவியான கலாவுக்கு அதே வகுப்பில் உள்ள ரதியின் மேல் பொறாமை வளர்ந்து கொண்டே செல்வதற்குச் சாதகமான காரணி

01) ரதிக்கு ஆசிரியையின் அன்பு கிடைத்தமை

02) ரதி விளையாட்டில் மிகவும் திறமையுள்ளவன்

03) ரதி வகுப்பில் எப்பொழுதும் முதல் மாணவி

04) ரதியை சகல போட்டிகளிலும் ஆசிரியை தெரிவு செய்தல்

05) மேற்கூறிய சகல காரணிகளும்

37) முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்கள் சில தரப்பட்டுள்ளன.

1) தாராள தன்மை 2) அனுதாபம் 3) போலச் செய்தல் 4) கேலி செய்தல்

5) தனித்திருத்தல் 6) எதிர்த்துப் பேசல்

மேலுள்ளவற்றில் சாதகமான நடத்தைக் கோலங்கள்

01) 1, 2, 3 02) 1, 5, 6 03) 2, 4, 6 04) 3, 5, 6 05) 4, 5, 6

38) சூலகத்தில் புறணி எனப்படும் மேற்பகுதியில் காணப்படுவது

01) இரத்த நாளங்கள்

02) நிணநீர் நாளங்கள்

03) லட்சக்கணக்கான கரு அணுக்கள்

04) உணர்வு நரம்புகள்

05) முட்டைகள்

39) மாதவிடாய்ச் செயற்பாடுகள் சில தரப்பட்டுள்ளன

அ – மஞ்சட் சடலம் ஆ- சூலகப்புடைப்பு இ - வெடித்தல்

ஈ - வளர்ச்சியடைதல் உ – சிதைவுறல்

மேலேயுள்ள செயற்பாடுகளின் சரியான படிமுறை

01) அ, ஈ, இ, ஆ, உ 03) உ, ஈ, இ, ஆ, அ 04) இ, ஈ, உ, ஆ, அ

02) ஆ, ஈ, இ, அ, உ 05) அ, ஆ, ஈ, இ, உ

40) கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணின் இரத்தத்தில் இருக்க வேண்டிய ஈமோகுளோபினின் அளவு

01) 12.59% 02) 14% 03) 16% 04) 10.5% 05) 6.5%

41) தாயின் குருதிக்கும் குழந்தையின் குருதிக்கும் இடையிலான வேறுபாட்டைப் பாதுகாத்து இரண்டையும் இணைக்கும் மெல்லியநாராக அமைந்துள்ளது

01) தொப்புள் நாண்

02) மூலவுரு

03) சூல்வித்தகம்

04) மூலவுருப்பாயம்

05) முதில் மூலவுரு

.

42) முளையத்திற்கு வெளியிலிருந்து வருகின்ற தாக்கங்களையும், அதிர்வுகளையும் ஏற்படுத்தாது பாதுகாப்பது

01) முதில்மூலவுரு மென்சவ்வு 04) கருப்பை

02) தொப்புள் நாண் 05) பலோப்பியன் குழாய்

03) சூல்வித்தகம்

43) பின்வருவனவற்றுள் அடிப்படை நெசவு அல்லாதது

01) சற்றின் நெசவு 02) கொழுவு நெசவு 03) யக்காட் நெசவு

04) தேன்கூட்டு நெசவு **05)** சரிவுக்கோட்டு நெசவு

44) துணிகளுக்குச் சாயமூட்டுவதற்காகச் சில சாயவகைகள் கீழே தரப்பட்டுள்ளது.

A – கந்தகம் B – அமிலம் C – குரோம் D – பிக்மென்ட் E - மூலயச்சாயம்


இவற்றில் நீரில் கரையும் சாயவகைகள்

01) A, D 02) A, B 03) D, E 04) B, C 05) B, E

45) சலவை செய்யும் முறைகள் எத்தனை வகை

01) 2 02) 4 03) 6 04) 3 05) 5

46) ஆடைபராமரிப்புடன் தொடர்பான பராமரிப்புச் சுட்டிகளின் சில அடையாளங்கள் கீழே தரப்பட்டுள்ளன




மேலேயுள்ள அடையாளங்களில் உயர்சலவைக்குப் பொருத்தமற்றதும், இயந்திர சலவைக்குரியதுமான குறியீடுகள் எவை?

01) B A 02) A C 03) C D 04) D C 05) B D

47) அப்ளிக் வேலையில் பயன்படுத்தப்படும் இரு தையல் முறைகள்

01) கம்பளித்தையல், அடைப்புத்தையல்

02) சிறுநூல், பெருநூல்

03) சோம், பெருநூல்

04) பெருநூல், புழுத்தையல்

05) யேசிடேசி, சிறுநூல்

48) உடைப்பாங்குகளுக்கான மாதிரியுரு தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய சரியான ஒழுங்கு

01) அளவு எடுத்தல், கணித்தல், பாங்கு வரைதல், சுவடு குறித்தல், வெட்டல்

02) அளவு எடுத்தல், அளவு கணித்தல், மாதிரி உரு வரைதல், பாங்கு வரைதல், வெட்டுதல்

03) அளவு எடுத்தல், கணித்தல், வரைதல், குறித்தல், வெட்டல்

04) அளவு எடுத்தல், மாதிரிஉரு, சுவடுவரை, வெட்டல்

05) அளவு எடுத்தல், அட்டவணைப்படுத்தல், மாதிரிஉரு வரைதல், வெட்டல்

49) இரா உடை தைக்கப் பயன்படும் பொருத்து வகை

01) எளியபொருத்து, மேற்செறிப்பொருத்து

02) பிரான்சியப் பொருத்து, மேற்செறிப்பொருத்து

03) தட்டைப்பொருத்து. எளிய பொருத்து

04) எளியபொருத்து, பக்கப் பொருத்து

05) தட்டைப்பொருத்து, மேற்செறிப் பொருத்து

50) பெண்களின் உடைகளில் திறப்புக்களை அமைக்கும் போது கவனிக்க வேண்டியது

01) இடப்பக்கம் மேம்படுத்தல்

02) திறப்பு நீக்கல்

03) ஓரத்தில் அமைத்தல்

04) வலதுபக்கம் மேற்படுத்தல்

05) எப்பக்கத்திலும் அமைக்கலாம்

முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) முன்னோடிப்பரீட்சை 2018
General Certificate of Education (Ad. Level)Third Term Examination, 2018

மனைப்பொருளியல்
Home Economics

28 | T | II

மூன்று மணித்தியாலம்
Three Hours

**பகுதி II**

**1ம் வினாவையும் வேறு இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) பிரபலமான பாடசாலையொன்றில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு சமூகமளித்த விருந்தினர்கள் மத்தியில் பாடசாலையின் அமைப்பு, சுற்றுப்பறச்சூழல், பாடசாலைத்தோட்டம், விழாவிற்காக அழகுபடுத்தப்பட்ட மண்டப ஒழுங்கு, அங்கு பயன்படுத்தப்பட்ட துணையணிகள் என்பவற்றைப் பற்றிய விமர்சனம் நடைபெற்றது. காரணம் எல்லோர் மனதையும் கவரும் வகையில் திட்டமிடப்பட்டு பயன்பெறும் முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட, ஆரம்பரச்செலவுகள் அற்ற இடமாகவும், நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

1.1 பாடசாலைத்தோட்டம் அழகாகவும், சுத்தமாகவும், பயன்மிக்கதாகவும் தோற்றமளித்தமைக்கான பராமரிப்பு முறைகள் பற்றிக் குறிப்பிடுக.
(குறைந்தது ஐந்து விடயங்கள் குறிப்பிடுக.)

1.2 பாடசாலையின் மண்டப ஒழுங்குபடுத்தலில் பின்பற்ற வேண்டிய கலைத்துவ அம்சங்கள் எவை?

1.3 விருந்தினர்களின் மண்டபம் அலங்கரிக்கப்பட்ட துணையணிகளில் தனி நிற இசைவு காணப்பட்டது தனி நிற இசைவு எனப்படுவது யாது?

1.4 மண்ட அலங்காரத்துக்காக பயன்படுத்தக்கூடிய துணையணிகள் நான்கு தருக.

1.5 சாப்பாட்டு மேசைக்கு அங்குள்ள வளத்தைப் பயன்படுத்தி ஒழுங்குபடுத்தக்கூடிய மலர் ஒழுங்கு ஒன்றினை வரைந்து காட்டுக.

**(2) சரியான முறைகளைப் பயன்படுத்தி துணிகளைப் பாதுகாப்பது அவசியமானது.**

2.1 துணிகளின் தரத்தை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தும் தொழில் நுட்பமுறைகள் எவை? அவற்றை விளக்குக.

2.2 துணிகளின் தரத்தை மேம்படுத்த சாயமிடல் முறை மேற்கொள்ளப்படுகிறது.

A – சாயமிடல் என்பது யாது?

B சாயமிடலுக்குப் பயன்படும் சாய வகைகள் நான்கு குறிப்பிட்டு அவற்றின் இயல்புகளையும் குறிப்பிடுக.

2.3 சாய வகைகளின் பண்புகள் நான்கு குறிப்பிடுக.

2.4 A – கறை எவ்வாறு ஏற்படுகிறது?

B – கறைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

C – கறை நீக்கிகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

(3) **விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப வளர்ச்சி காரணமாக வீட்டுக் கருமங்களுக்கு மின் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

**3.1** ஒளியையும், வெப்பத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய மின் உபகரணங்கள் 3 வீதம் குறிப்பிடுக.

3.2 மின்குமிழ்களின் கண்டுபிடிப்புக்களும் அவற்றின் வளர்ச்சியும் அனுகூலம் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

3.3 A - இயக்கப்பாட்டு சக்தியாகப் பயன்படும் மின் உபகரணங்கள் நான்கு குறிப்பிடுக.

B – மின்னழுத்தி ஒன்றின் படத்தினை வரைந்து பகுதிகளைக் குறிப்பிடுக.

(4) **ஆடை தயாரிப்பில் துணிகளின் இயல்புகள் அறிந்து கொள்வது அவசியம்**

**4.1** துணிகளின் இயல்புகளை எவ்வாறு இனம்காண முடியும். குறைந்தது நான்கு முறைகள் குறிப்பிடுக.

4.2 சேலைக்கான இரவிக்கையில் மாதிரி உருவைப் பயன்படுத்தி துணியின் பகுதிகளை வெட்டும் முறைகளைக் குறிப்பிடுக.

4.3 மனையிலிருந்து அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் முகாமை செய்யும் (பயனுள்ள அகற்றல்) முறைகளையும் குறிப்பிடுக.

**பகுதி II 5ம் வினாவும் வேறு மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(5)தாரணி க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வவுனியாவில் உள்ள தனது மாமி குடும்பத்திற்குச் சென்றிருந்தார். அங்கு மாமா, மாமி தாரணியின் வயதுள்ள மச்சாள், முன்பள்ளி செல்லும் சிறுமி, படுக்கையில் உள்ள தனது பாட்டி ஆகியோர் வசித்து வருகின்றனர். அன்றைய மதிய உணவு தயாரிக்கும் பொறுப்பு தாரணிக்கு வழங்கப்பட்டது.

01.) A – தாரணியின் மாமியின் குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் எவ்வகைப் பருவங்களை உடையவர்களாகக் காணப்பட்டனர்?

B –வயோதிபப் பருவத்தினருக்கு உணவு தயாரிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக?

02.) தாரணி மதிய உணவைத் தயாரிப்பதற்காக மஞ்சள் பூசணி, வல்லாரை, நெத்தலி, முட்டை, பீற்றூட், சிவப்பு பச்சை அரிசி (தவிடுள்ளது) என்பவற்றைத் தெரிந்து எடுத்தார்.

A – மேலுள்ள உணவுப் பொருட்களில் அடங்கும் போசணைக் கூறுகளைக் குறிப்பிடுக.

B – பூசணி, வல்லாரை, பீற்றூட் என்பவனவற்றில் காணப்படும் நிறப் பொருட்களைக் குறிப்பிடுக.

03.) பதிலீட்டு உணவு என்றால் என்ன? உதாரணம் தருக.

04.) குழந்தையின் உடல் ஆரோக்கியத்திற்காக கசநோய், போலியோ, முக்கூட்டு வக்சின், சின்னமுத்து ஆகியன வழங்கப்படும் காலங்களைக் குறிப்பிடுக.

05.) பிள்ளைகளின் மனவெழுச்சிகளில் நேரான, எதிரான தாக்கங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?

(6)

1. கட்டிளம் பருவத்தினரின் உடல், உளத்தேவைகள் 2 வீதம் தருக.
2. கட்டிளம் பருவ வளர்ச்சியில் தொலைத்தொடர்பு சாதனங்களின் செல்வாக்குப் பற்றிய உமது கருத்து யாது? (குறைந்தது 5 விடயம்)
3. கட்டிளம் பருவத்தினரின் நேரான, எதிரான நடத்தைக் கோலங்கள் எவை எனக் குறிப்பிடுக.

(7) **உணவாகவும், விசேட வைபவங்களின் போதும் சாண்ட்விச் பயன்படும்**

01.) சான்ட்விச் வகைகள் 4 குறிப்பிட்டு அதற்காகப் பயன்படும் பாணின், இயல்புகள் எவை எனவும் எழுதுக.

02.) சிற்றுண்டி தயாரிப்பில் பயன்படும் மாப்பசை வகைகள் எவை? உதாரணங்களுடன் குறிப்பிடுக.

03.) A - ஈற்றுணாக்கள் தயாரிக்கும் முறைகள் எவை?

B - ஈற்றுணாவின் தரத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள் எவை?

C – குளிரூட்டியில் ஈற்றுணா தயாரிக்கும் போது அவதானிக்க வேண்டிய அம்சங்கள் எவை?

(8) நற்காப்பு முறைகளின் மூலம் உணவு பழுதடைவதைக் கட்டுப்படுத்தலாம்.

01.) நற்காப்புக் கோட்பாடுகளையும், உத்திகளையும் அட்டவணைப்படுத்துக.

02.) உணவு நற்காப்புக்காகப் பயன்படும் காரணிகளின் கூட்டங்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

03.) பாலில் இரண்டு முறைகளில் பாச்சர் முறைப் பிரயோகம் மேற்கொள்ளப்படும். அவ்விரு முறைகளையும் அவற்றைக் குறிக்கும் குறியீடுகளையும் குறிப்பிடுக.

(9)

01.) போசணைச் சிக்கல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் எனக் கூறுக.

02.) மக்களின் போசணைக் குறைப்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் உதவும் அமைப்புக்கள் எவை?

03.) A – அல்லூட்ட நிலமையினால் பாதிக்கப்படும் பருவத்தினர் யாவர்?

B – பின்வரும் அல்லூட்ட நிலமைகளுக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

1. புரதக் கலோரிக் குறைபாடு
2. அனீமியா
3. செரொப்தல்மியா, கெரட்டோ மலேசியா
4. கண்டற் கழலை